# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி -2 | தி.பி. 2015 | கன்னி 28 (14-10-84) | 65 காசுகள் | இதழ் எண் : 46 | பகுதி 40-42


# இலங்கைச் சிக்கலை ஐந்தாண்டுக்குள் தீர்க்கவில்லையானால், இலங்கையில் உள்ள தமிழினமே முழுவதும் அழிந்துபடும்!

## யார் தலையீடு செய்தாலும், என்னவகைப் பேச்சுகள் நடந்தாலும், இறுதியில் தமிழீழம் பெறுவதே முடிவாக இருக்கும்!

# இலங்கைத் தமிழர் அழிக்கப்பட்டால், உலகில் சிங்களர் ஒருவரும் மிஞ்சாமல் அழிக்கப்படுவர்

## என்பதை செயவர்த்தனே உணர வேண்டும்!

### பாவலரேறு எச்சரிக்கை!

நாளுக்குநாள், வேளைக்கு வேளை இலங்கைத் தமிழர்கள் அங்குள்ள சிங்கள வெறியர்களால் அழிக்கப்பட்டுக் கொண்டே உள்ளனர். உலகம் முழுவதும் பார்த்துக்கொண்டிருக்கவே பூட்டோ தூக்கிலிடப் பெற்றது போல், தமிழர்கள் செத்துக் கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக, அனைவரையும் விட நாம் சொன்ன கருத்துகள்தாம் நடந்து வருகின்றன. 'பேச்சுரைகளால் பயனில்லை; அஃது ஓர் ஏமாற்று; கண்துடைப்பு' என்று 'தமிழ்நிலம்' தான் முதன் முதலில் கருத்தை வெளிப்படுத்தியது 'இல்லை, அதனால் பயன் கிடைக்கும். இந்திராகாந்தி இரக்கம் வைத்துவிட்டார்; இதோ நடந்துவிடும்; அதோ நடந்துவிடும்' என்றெல்லாம் இங்குள்ள தலைவர்கள் வாய்வீச்சு வீசினார்கள்: படைதிரட்டிக் கொண்டு சிலர் பாயப்போனார்கள். தில்லிக்கும் சென்னைக்கும் இலங்கைக்கும் சிலர் ஆலாய்ப் பறந்தார்கள்! இன்னும் சிலர் திறமைசாலிகள் 'தமிழகமே திரண்டு எழும்' என்று நாவீரம் பேசித் தங்கள் பெயருக்கு நல்ல விளம்பரம் தேடிக் கொண்டார்கள். சிலரோ, மாநாடு, பேரணி என்றெல்லாம் கூத்தாட்டம் காட்டிப் பணத்தை வாரிக் குவித்துக் கொண்டார்கள். ஆனால், அந்தோ, அனைத்தும் புசுவாணங்களாகவே, ஊமை வெடிகளாகவே போய் விட்டன!

'இலங்கைத் தலைவரும் இந்திய முதல்வரும் தமிழரைப்பொறுத்தவரையில் ஒரே கருத்தினர்தாம்' என்பதை நாம்தாம் ஆணித்தரமாக அறைந்து கூறினோம். ஆனால், எவரும் அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. மேலும் மேலும் இந்திரா காந்தியால் இலங்கைத்தமிழினம் விடிவுபெறும் என்றே நம்பிக் கிடந்தனர்; நம்பிக்கொண்டே உள்ளனர். ஆனால், அந்த அம்மையார் அரசியலில் ஒநாய் என்று எவருமே உணரவில்லை.

பொதுவாகத் தமிழினத்தைப் பற்றிக் கூற வேண்டுமானால், தனக்குத்தானே துணைவராத ஒரு பேயினம் இது! தனக்குத்தானே அழித்துக் கொள்ளும் ஒரு நாயினம் இது! தன்னைத்தானே காட்டிக் கொடுத்துக் கொள்ளும் ஒரு நரியினம் இது! (நல்லவர்கள் பொறுத்துக்கொள்க!)

உண்மையானவர்களின் - நேர்மையாளர்களின்—கருத்துகள் இதன் செவிகளுக்கு எட்டவே எட்டாது! நயவஞ்சகர்களின் நயப்புரைகளுக்கே செவிகொடுக்கும் தன்மை உடையவர்கள் இவர்கள்! எனவே நம் கருத்துகள், வேண்டுதல்கள் அனைத்தும் பாலைநிலத்து நிலவு ஒளியாகப் பயனின்றிக் கழிந்தன! கழிகின்றன! அங்குப்பெய்யும் மழையைப் போல் வீணாகப் போயின; போகின்றன!

நாம் என்ன செய்ய இயலும்? 'நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார், சொற்பொருள் சோர்வுபடும்' என்னும் இனநலப்பேராசான் இன்னுரைக்கொப்ப, நம் கருத்துரைகள் சோர்வுபட்டுப் போயின. கோடி கோடியாய்க் குவித்து வைத்திருப்பவர்களே, இந்த இனநல மீட்பு முயற்சியில், நாடிதளர்ந்து, நரம்பு துவண்டு கிடக்கின்றனர். 'ஆ' 'ஊ' என்னும் அலட்டல் ஒலிகளும் 'ஓ' 'ஏ' என்னும் உறுமல் ஒசைகளும் தமிழினத்தை மீட்குமா? ஆனால் மீட்கும் என்று அவர்கள் நயப்பாசை காட்டி மக்களை வயப்படுத்தி வைத்திருக்கிறார்கள்' அவர்களை ஒன்றுக்குமே உதவாத ஆட்டுக்குட்டிகளாய் ஆக்கி வருகிறார்கள்! அவர்களுக்கு இவர்களைத் தவிர வேறு எவர்களையும் சிந்திக்கத் தெரியாது! அந்த அளவில் இவர்களுக்கு அவர்கள் முழு அடிமைகள்! இனி, நிலை இப்படியே போனால் என்னாவது?

எந்தமிழ் ஈழ இளைஞர்களே! வீறுகொண்ட வேங்கைகளே! விடுதலைப் புலிகளே! அதனால்தான் சொல்லுகிறோம். இங்கு ஏற்கனவே அடிமைப்பட்டு, முதுகெலும்பு முறிந்து, இந்திராக் குழுமத்திற்கு என்றென்றும் எடுபிடிகளாய், இளைத்த துடைப்பங்களாய்ப் போன, இவ் வேதுங்கெட்ட தமிழகத்தில், அவல மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் எங்களைப் போலும் தவளைக் கூட்டத் தலைவர்களை ஒருபோதும் நம்பாதீர்கள்! நாங்கள் ஒருகாலும் உங்களுக்குத் துணை வர முடியாது!

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

# ஈழ விடுதலைப் போராட்டம் - இந்தியா தலையிட வேண்டுமா?

## அமிர்தலிங்கம் பேச்சுக்குத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் கடும் கண்டனம்!

## சென்னையில் தொடங்கிய உலகத் தமிழர் மாமன்றம், தந்நலமும் ஊதிய நோக்கமும் கொண்ட ஒரு வணிக அமைப்பே!

'வங்கதேச விடுதலைப் போராட்டத்தில் இந்திய அரசு நேரிடையாகத்தலையிட்டது போல், இலங்கைத் தமிழர் சிக்கலுக்கும் தீர்வுகாண, இந்திய அரசு நேரிடையாகத் தலையிட வேண்டும்' என்று அமிர்தலிங்கம் கூறிய கருத்து கண்டிக்கத் தக்கது என்று உமாமகேசுவரனை (முகுந்தனை)த் தலைவராகக் கொண்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், அண்மையில் சென்னையில் விடுத்த ஓர் அறிக்கையில் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

அண்மையில் (செப். 18) சென்னையில், 'உலகத் தமிழர் மாமன்றம்,என்ற ஓர் அமைப்பு தொடங்கப் பெற்றது. அதற்கு மலேசியாவைச் சேர்ந்த டேவிட் என்பவர் தலைவராகவும், சனார்த்தனம், மலேசியா கே. ஆர். இராமசாமி ஆகியோர் துணைத்தலைவர்களாகவும், எம். கே. முசுதபா என்பவர் பொருளராகவும் தேர்ந்து எடுக்கப் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அம் மன்றத்தின் தொடக்க விழாவில் இலங்கை விடுதலைக் கூட்டணித்தலைவர் சிவ. சிதம்பரம், பொதுச் செயலாளர் அமிர்தலிங்கம், திராவிடர் கழகத்தலைவர் கி. வீரமணி, மலேசியா திராவிடர் கழகத்தலைவர் கே. ஆர். இராமசாமி, 'அந்தமான் முரசு' இதழாசிரியர் சுப. சுப்பிரமணியன், பிசித்தீவு எம். ஆர். பாலகணபதி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். எம். கே. முசுதபா நன்றி கூறினார்.

அம் மன்றத் தொடக்கத்தைப் பற்றி அதன் அமைப்பாளர்கள் கூறுகையில், 'உலகில் வாழும் தமிழ்ப் பெருங்குடி மக்களின் ஒற்றுமைக்கும் உரிமைக்கும் நடத்தும் கிளர்ச்சிகளிலும் ஒன்றுபட்டுச் செயல்பட உலகத் தமிழர் மாமன்றம் உருவாக்கப் படுவ'தாகக் கூறினார்கள்.

அவ்விழாவில் கலந்து கொண்ட அமிர்தலிங்கம் பேசுகையில் தான், வங்கதேச விடுதலைப் போராட்டத்தில் இந்திய அரசு நேரடியாகத்தலையிட்டது போன்று, இலங்கைத் தமிழர்களின் சிக்கலுக்குத் தீர்வுகாண இந்திய அரசு நேரடியாகத் தலையிட வேண்டும் என்று கூறினார்.

அப்பேச்சைச் சுட்டிக் காட்டி, உமாமகேசுவரனை (முகுந்தனை)த் தலைவராகக் கொண்டு இயங்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், கீழ்வருமாறு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது.

'பொறுப்புணர்வின்றி அமிர்தலிங்கம் பேசிய இத்தகைய பேச்சைத் தமிழீழ விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அடிப்படையில் இலங்கைத் தமிழர்களை முன் வைத்து, உயிரற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இலங்கையில் இந்தியப் படைத்துறையினர் தலையீடு குறித்துப் பேச உரிமையற்றவர்கள்.

சிங்களரின் தமிழ்ப் பேரின அழிப்புக்கு எதிரான, நயன்மையான எமது விடுதலைப் போராட்டத்திற்கு உலகிலுள்ள முற்போக்கு அரசுகளினதும், நிறுவனங்களினதும் உதவியை நாடி நிற்கின்றோம். குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களிடமும் இந்திய மககளிடமும் ஆதரவை நாடி நிற்கின்றோம். தமிழ்நாட்டு அரசும் இந்திய அரசும் எமது மக்களின் துயர்துடைக்க எமக்கு உதவ வேண்டும். இஃது எமது மக்களின் விடுதலைப போராட்டம். இதை நாமே வழிநடத்திச் செல்ல வேண்டும். எமது மக்களின் இன்னல்களைக் களைந்தெறிய எமது நயன்மையான கோரிக்கையை மதித்து உதவிடல் வேண்டும். எமது மக்களின் விடுதலையை வென்றெடுக்கும் உளத் திடமும் வலிவும் எம்மிடம் இருக்கின்றது.

அமிர்தலிங்கத்தின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒரு நிழல் அரசை (Shadow Govt.) யும் அமைக்கவிருப்பதாக அறிகின்றோம். தமிழீழ விடுதலைக்கான எவ்வகை வேலைத்திட்டங்களோ அல்லது அரசியல் தந்திர உளவுகளோ அற்ற இவர்கள் அமைக்கப் போகும் இந்த நிழல் அரசால், எவ்வகைப் பயனும் ஏற்படப் போவதில்லை-என்பதோடு வல்லாண்மையரசின கைக்கூலிகள் இடம் பெற்றுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந்த மாயத் தோற்றமான 'நிழல் அரசினால்' தமிழீழ விடுதலைப் போராட்டத்தின முற்போக்குக் கூறுகளை காட்டிக் கொடுக்கப்படும் என்பதனாலும் இவர்களின் இச்செயலை நாம் வன்மையாகக் கண்டித்து ஒதுக்குகின்றோம்.

உலகத் தமிழர் மாமன்றம் வாணிக நோக்கம் கொண்டது :

கடந்த கிழமை கூட்டப்பெற்ற உலகத் தமிழர் மாமன்றம், வெறும் தந்நல நோக்கங் கொண்ட தனி ஆட்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழகத் தலைவர்களோ, தமிழீழ விடுதலை இயக்கங்களோ பங்கு பெறாத இத்தகைய தனி ஆள்களின் உலகத் தமிழர் மன்றம் வெறும் வாணிக நோக்கம் கொண்டதே. இஃது உலகில் வாழும் தமிழர்களின் சிக்கல்களுக்கு உதவிட முடியாத ஒரு வாணிக அமைப்பாகும்.

தமிழீழ மக்களின் எத்தகைய உணர்வையும் வெளிப்படுத்த உரிமைபற்ற கூட்டணியினரும், பிற தனி மாந்தர்களும் பங்கேற்றுள்ள இவ்வுலகத்தமிழ் மாமன்றம் வெளிநாட்டிலுள்ள முதலாளியக் கொள்கையாளரின் வாணிக நோக்கத்திற்கே ஏற்படுத்தப் பட்டுள்ளது.

பரந்த உலகில் வாழும் தமிழர்களின் நிலையை வெளிப்படுத்த இச்சிறுபான்மை முதலாளியக் கருத்தாளர்களுக்கு எந்தவகையிலும் உரிமையில்லை எனத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் தனிப்பட்ட முறையில் மிகத்தொகையான பணத்தை இலண்டன் வாழ் தமிழ்மக்களிடம் இருந்து, தமிழீழப் போராட்டத்தைச் சேர்த்தவர்களும், தனிப்பட்ட முறையில் பல்வேறு நாடுகளில் தமிழீழச் சிக்கலைக் காட்டிப் பணம் திரட்டியவர்களும் இவ்வுலக மன்றத்தில் இருப்பது மிகவும் ஐயத்திற்கிடமானது. இதனால் பொதுமக்களின் பணமும் வீணாக்கப் படலாம் எனத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இத் தனி ஆள்களை இனம் காணும்படி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அவ்வறிக்கையில் கூறப் பெற்றுள்ளது.

— 0 —

# தமிழக விடுதலை இயக்கம் ஒன்றுவேண்டும்!

அன்புடையீர்,

இதுவரையிலான உலகின் வரலாற்றைக் கூர்ந்து கவனிப்பவர்களுக்கு இன்றைய உலகின ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு மார்க்சியம் தான் ஒரே நம்பிக்கையாகவும் வழிகாட்டியாகவும் இருக்கிறது என்பதில் ஐயம் இருக்கமுடியாது. ஆயினும் தோழர் மாசேதுங்கின் மறைவிற்குப் பிறகு, சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமை புரட்டல் காரர்களால் கைப்பற்றப்பட்டதும், சீனத்தில் முதலாளியம் மீட்கப் பட்டு வருவதும் உலகப் புரட்சி இயக்கத்திற்கு ஏற்பட்ட பின்னடைவாகும் என்பதில் ஐயமில்லை.

உலகிலும் இந்தியாவிலும் பொதுவுடைமை இயக்கத்தில் தொடர்நது பிளவுகள் ஏற்பட்ட வண்ணமாய் உள்ளன. ஒருவகையில் பார்த்தால் இது, புரட்சி இயக்கம் நெருக்கடியில் சிக்கியிருப்பது போன்ற எண்ணத்தைத் தருகிறது. மறுபுறமோ, நெருக்கடிகளின் மூலமே ஒவ்வொரு முறையும் புரட்சிகரப் பொதுவுடைமை இயக்கம் தன்னைப் புத்தமைத்துக் கொண்டு புதிய வலுவுடன் எழுச்சி பெற்று வந்துள்ளதுஎன்றஉண்மையையும் நாம்மறந்துவிடக்கூடாது.

உலக அளவிலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் இன்றும் புரட்டல் கருத்தே பொதுவுடைமை இயக்கத்திலுள்ள முதன்மை எதிரியாக உள்ளது. ஆனால் புரட்டல் கருத்தை எதிர்த்துப் போராடியவர்களால் உருவாக்கப்பட்ட மார்க்சிய-இலெனினிய இயக்கமும் கூட மக்களின் விடுதலைப் பாதையை வகுப்பதில் தெளிவுகாண முடியவில்லை. மார்க்சிய-இலெனினியர்கள் இன்றுபல்வேறுகுழுக்களாக இயங்கி வருகின்றனர். புரட்சிகர இயக்கத்தை ஒன்றுபடுத்தும் வலுவான கோட்பாடு அடிப்படை இன்னும் உருவாக வில்லை. உயிரோட்டமுள்ள வகையில் மார்க்சியத்தைப் பயன்படுத்தாததும், இங்குள்ள சூழ்நிலையைத் திட்டவட்டமாக ஆராயத் தவறியதும் இதற்கு முகாமைக் காரணங்களாக உள்ளன

இந்நிலையில், புரட்டல்கருத்தையும் வரட்டுக் கோட்பாடுகளையும் எதிர்த்துப் போராடுதலும், ஏற்கனவே நாம் வகுத்துக் கொண்ட நிலைப்பாடுகளை இங்குள்ள சூழ்நிலை பற்றிய ஆழமான ஆய்வின் அடிப்படையில் மறு ஆய்வுக்கு உட்படுத்துதலும், சரியான புரட்சிகர நடவடிக்கைகளுக்கு இன்றியமையாததாகும்.

உலக வல்லாளுமையின் சுரண்டலும் அதன் ஆட்சியும் இன்று புதிய புதிய வடிவங்களை எடுத்துள்ளன. சோவியத்துச் குமுகாய வல்லாளுமையும் அமெரிக்காவும் உலக ஆளுமைக்காக மேற்கொள்ளும் கடும் போட்டிகள் புது வடிவம் எடுத்துள்ளன. இன்று, இத் துணைக் கண்டத்தில் புரட்சியில் அக்கறையுடையவர்கள் இம் மாற்றங்களைக் கருத்தில் கொண்டாக வேண்டும். புறச் சூழலின் கட்டாயத்தால் அவர்கள் மற்றுமோர் உண்மையையும் உணர வேண்டியுள்ளது. இன்று ஒடுக்கப்பட்டுள்ள பல்வேறு தேசிய இன மக்களும் தங்களது விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர். தவறான தலைமையும் அதனால் தவறான வழிகளும் இருக்கலாம். ஆனால் அந்த மக்களின் விடுதலையுணர்வு சரியான முறையிலேயே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்: அவர்களது போராட்டம், உலக வல்லாளுமைகளின் ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்குமான கருவியாக உள்ள இந்திய அரசை எதிர்த்து நடத்தப்படும் போராட்டமாகும். தேசிய இனக் கருத்து என்பது மிகப் பெரும் சிக்கலாக 1962 இல் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தினுள் தோன்றியது; ஆனால் மறைக்கப் பட்டது. ஆனாலும் காலப்போக்கில் அது வளர்ச்சியடைந்து நிற்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை தமிழக மக்களின் விடுதலைக்கான புரட்சிஇயக்கம் பரவலாக வேண்டும். தமிழக மக்களின் விடுதலை என்பது இந்தியாவிலுள்ள பிற தேசியஇன மக்களின்-ஒடுக்கப்படும் மக்களின் விடுதலையிலிருந்து பிரிக்கப்பட முடியாதது.

தமிழகத்தைப் பொறுத்தவரை இங்கு வாழும் பரந்துபட்ட மக்களின் விடுதலைக்கான சரியான அரசியல் வடிவமும் வழிநடத்துதலும் தேவைப் படுகிறது. தோழர் மாசேதுங் கூறியது போல ஒரு மிகப்பெரும் விடுதலை இயக்கமானது ஒரு பண்பாட்டுப் படையைப் பெற்றிருக்க வேண்டும். அரசியல், கலை, இலக்கியம், அறிவியல், தொழில் நுணுக்கம் போன்ற அனைத்துத் துறைகளிலும் அது மக்களுக்கு ஒளிதரத் தக்கதாக இருக்க வேண்டும்.

உலகம் முழுவதிலுமுள்ள தலை சிறந்த சிந்தனையாளர்களின் கருத்துகள் பக்குவமாகச் செரித்துக் கொள்ளப்பட வேண்டும். உலகப் புரட்சிகர இயக்கப் பட்டறிவுகள் திரட்டப்பட வேண்டும். வல்லாளுமையாலும் நிலவுடைமை ஆற்றல்களாலும் தமிழகத்தில் பரப்பப்பட்டு வரும் பண்பாட்டுச் சீரழிவை எதிர்த்துப் போராட வேண்டும். அப்போதுதான் இளைய தலைமுறையினருக்கு வாழ்வின் மீது நம்பிக்கையும் போராட்டத்துக்கான தெம்பையும் ஊட்ட முடியும்.

— கா. மனோகரன்

நன்றி - 'மார்க்சியம் இன்று' இதழுக்கான அறிவிப்பு

# இந்து மதம் மக்களை வேறுபிரிக்கிறது!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!


# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 46 (14-10-84) பகுதி-40-42


# பட்டாசு மருந்துகளை வெடி குண்டுகளாக்கித் தமிழீழ விடுதலைப் போராளிகளிடம் கொடுங்கள்! தமிழினம் உய்யட்டும்!

## பட்டாசுத் தொழிற்சாலை முதலாளிகளுக்கு வேண்டுகோள்!

தமிழனுக்குத் தேவையான உணர்வுகள் என்றுமே வளர்வதில்லை. தேவையில்லாத உணர்வுகளே மிகுதியும் வளர்ந்து விடுகின்றன. அடிமையுணர்வுக்கும் போலிப் பொழுது போக்குணர்வுகளுக்கும் இவன் என்றுமே பல்லை இளித்துக்கொண்டு அடிமைப்பட்டு விடுகிறான். தாய்மொழி உணர்வு, தன்னின உணர்வு, உரிமை உணர்வு, தமிழ்நாட்டு உணர்வு என்பன போன்ற வாழ்வியல் உணர்வுகள் என்றுமே இவனுக்குத் தேவையில்லாத உணர்வுகளாக ஆகிவிடுகின்றன.

மூடநம்பிக்கைகள், விருந்து வேடிக்கைகள், பொழுதுபோக்குகள் என்றால், இவன் குடும்பம் குடும்பமாக அவற்றில் வீழ்ந்து கும்மாளம் போடத் துணிந்து விடுகிறான். இவன் கொண்டாடும் திருவிழாக்கள், 'பண்டிகைகள்' ஆகியவை நடைபெறும் காலத்தில், இவன் அரும்பொருளைச் செலவு செய்து வீணாக்கும் உணவுப் பண்டங்கள், விலைமதிப்பற்ற பொருள்கள், நேரங்கள் முதலியவற்றுக்கு அளவே இல்லை. அறியாமையால் சில செலவுகள், பகட்டுக்காகச் சில செலவுகள். பொழுதுபோக்குக்காகச் சில செலவுகள் என அந்தக் காலங்களில் இவன் செய்யும் கூத்தாட்டங்களால் இவன் என்றென்றும் நிலையான அடிமையாகவே போய்விடுகிறான்.

அண்மையில் தீபாவளி என்னும் விளக்கணிவிழா வரவிருக்கிறது. இதன் பெயரே தமிழ் இல்லை. எனவே இவ் விழாவும் தமிழர்களுக்கானதில்லை என்று தெளிவாய்த் தெரிந்து கொள்ளலாம். இப்பொழுது இந்தியாவில் கொண்டாடும் விழாக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு தமிழர்களுக்குக் குறிப்பாகத் திராவிடர்களுக்கு உரியவை அல்ல.

ஆவணி அவிட்டம், விநாயகர் சதுர்த்தி, சரஸ்வதி பூஜை, ஆயுதபூஜை, தீபாவளி, கிருஷ்ணஜெயந்தி, ஸ்ரீராமநவமி, விஜயதசமி, மாசிமகம், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், தமிழ் வருஷப்பிறப்பு, தெலுங்கு வருஷப்பிறப்பு, ஆடிக்கிருத்திகை, ஆடி அமாவாசை, கோகுலாஷ்டமி முதலிய அனைத்தும் ஆரியப்பார்ப்பனர்கள் தங்கள் வாழ்க்கை, நலன்களுக்காக ஏற்படுத்திக் கொண்ட மூடநம்பிக்கை, புராண அடிப்படை கொண்ட விழாக்களே! இவற்றிலும் இவைபோலும் பிறவற்றிலும் வாழ்வியல் அறிவுக்கோ அறிவியல் அறிவுக்கோ பொருத்தமான செய்தி ஒன்றுகூட இல்லை. இவற்றின் பெயர்களைப் பார்த்தாலே இவை தமிழர் விழாக்கள் அல்ல என்று வெளிப்படையாகத் தெரியும். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் சார்பில் நின்று இதை நாம் சொல்லவில்லை. கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் சார்பிலேயே நாம் இதனைச் சொல்லுகிறோம். இவ் விழாக்களில் ஏதேனும் கடவுள் உண்மை உள்ளது என்று எவராவது மெய்ப்பிக்கமுடியுமா? மூடத்தனத்தையும் அறியாமையையும் விட இவற்றில் ஏதேனும் சிறு நன்மை உள்ளது என்று கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் எவரேனும் கூறமுடியுமா?

மக்களை ஏமாற்றி, மூடநம்பிக்கையில் ஆழ்த்தி, அவர்கள் விழிப்படையக் கூடாது என்பதற்காகவன்றோ இவ் விழாக்களை ஏற்படுத்தினார்கள், பார்ப்பனர்கள். அதுவும் பெண்களை அடிமைப்படுத்தும் தலையாய நோக்கமே இவ் விழாக்களுக்கு வேராக அமைந்து கிடக்கிறது. ஆண்களில் பெரும்பாலார் பெண்களைச் சார்ந்தவர்களே ஆகையால், மத, மூட, அறியாமை, அடிமைத்தனங்களில் அவர்களை ஈடுபடுத்தினால் தான், ஆண்களும் அவற்றைக் கைவிடாமல் பின்பற்றி வருவார்கள் என்பதுவே பார்ப்பனர் கொள்கை. பெண்கள் அடிமைத்தனத்தில் இரண்டு தன்மைகளைப் பார்ப்பனியம் எதிர்நோக்குகிறது. வருணாசிரம, சாதி வேறுபாடுகள் நிலையாக இருப்பதற்கும், இந்துமதக் கோட்பாடுகள் அழியாமல் இருப்பதற்கும், பெண்களை அடிமையாக வைத்திருப்பது பயன்பட்டது. இன்றும் மேலே கூறிய திருவிழாக்கள் கொண்டாடப்படுவதற்குப் பெரிதும் காரணமாக இருப்பவர்கள் பெண்களே! இன்னும் வெளிப்படையாகச் சொல்வதானால், பெண்கள் முன்னேறாமல் இருப்பதால்தான், நாம் குமுகாய, அரசியல் நிலைகளில் கூட இன்னும் முன்னேறாமல் இருக்கிறோம்.

எனவே, இம் மூடநம்பிக்கை விழா ஆரவாரங்களை நாம் விட்டொழிக்க வேண்டும். தமிழீழத்திற்காகப் போராடும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் இத்தகைய மூடநம்பிக்கைகளும் ஆரிய அடிமைத்தனங்களும் அளவுக்கு மீறி உள்ளன.

அண்மையில் வரவிருக்கும் 'தீபாவளி' விழாவுக்காக மிகப்பெரும் ஆரவார வாணிகக் கொள்ளைகள் நடைபெறுகின்றன. அவை அனைத்திலும் முகாமையான வாணிகம் 'பட்டாசு' வெடி வாணிகமே! வெடிகளும் எரிகளும், வண்ணப் புகைச்சல்களும் என்று ஏறத்தாழ 140 வகைப் பட்டாசுப் பொருள்கள் வரவிருக்கின்றன என்று சொல்லப்பெறுகிறது. ஏறத்தாழ 40 கோடி உருபா இவற்றில் முதலீடு செய்யப்பெற்று, மக்களின் கைகளிலிருந்து வணிகர்களின் கைகளுக்கு மாற இருக்கிறது. நாட்டுப் பாதுகாப்புக்கும், பல அரிய வேதியல் விளைவுகளுக்கும் மிக இன்றியமையாத பலவகை மருந்துகள், வீணான வெடிகளாகவும் புகைகளாகவும் கருகி, மக்களின் காதுகளையும், கண்களையும் கெடுத்து, உடல் நலன்களையும் சீரழிக்கப் போகின்றன. ஏற்கனவே பல உயிர்கள் இந்த ஆரவார வெடிச் சேதங்களில் பலியாகி உள்ளன. இன்னும் இவ்விழா முடிவதற்குள் இன்னும் எத்தனைப்பேர்கள் உயிர்கள் போகுமோ, சொல்லமுடியாது!

பின், ஏன் இத்தனைக் கேடான விழாவை அரசு தடைசெய்யாமல் உள்ளது? அதைத்தான் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அரசியல் தந்திரங்களிலேயே தலையாயது இதுதான். மக்களை இத்தகைய விழா வேடிக்கைகளில் ஈடுபடுத்தினால்தான், அவர்கள் அரசியலில் நடக்கும் ஏமாற்றுகளைத் தெரிந்து கொள்ளமாட்டார்கள்! அதனால், உரிமை, புரட்சி முதலிய போராட்டங்களில் ஈடுபட மாட்டார்கள் என்பது ஆளுகின்ற ஆட்சியாளர்களின் தந்திரமாகும். எனவே இவற்றை எந்த முதலாளிய, மத அரசும் தடை செய்வதில்லை.

இந்தியாவில் இப்பொழுதுள்ள முதலாளிய ஆட்சி மாற்றப்படும்வரை இத்தகைய மூடநம்பிக்கைகள், ஏமாற்றுகள், எத்துகள், பொருளியல் சீரழிவுகள் முதலியவை இருந்து கொண்டுதான் இருக்கும். எனவே நாம் எத்துணையளவுதான் எழுதினாலும் கத்தினாலும், இவற்றை உடனடியாக விலக்கிவிட முடியாது.

ஆனால், இந்த நேரத்தில் நாம் ஓர் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். அஃதாவது இந்தத் 'தீபாவளி' விழா வேடிக்கையில் பயன்படுத்தப்படும் 'பட்டாசு' வெடிகளில் புகைச்சல்களில் நூற்றுக்கு 75 பங்கு நம் தமிழ்நாட்டில் உள்ள சிவகாசியில்தான் செய்யப்பெறுகிறது. ஏன் உலகில் உள்ள பல நாடுகளுக்குமே இங்கிருந்துதான் வெடிகள் போகின்றன. எனவே, நம் சிவகாசியில் உள்ள தமிழர்களான நம் பட்டாசு முதலாளிகளுக்கு ஓர் அன்பான வேண்டுகோளை நாம் இவ் வேளையில் முன் வைக்க விரும்புகிறோம்.

'அன்பான சிவகாசி, பட்டாசுத் தொழிற்சாலை முதலாளிகளே! தமிழினத்துக்கு இப்பொழுது நேர்ந்துள்ள கொடுமையான நிலைகளை, நீங்கள், இப்பொழுது இலங்கையில் உள்ள சிங்களக் கயவர்களால் அங்குள்ள ஈழத்தமிழர்களுக்கு நடக்கும் இன அழிவுகளிலிருந்து மிக நன்றாக உணர்ந்திருப்பீர்கள். அந்நிலைகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நம் இளைஞர்களுக்குப் போதுமான போர்க்கருவிகள் இல்லை. இங்குள்ள இந்திய அரசும், அங்கு வீழ்த்தப்படுவது நம் தமிழினம் என்பதால், பார்த்தும் அவர்களுக்கு உதவி ஏதும் செய்ய விருப்பமில்லாமல், பாராததுபோல் உள்ளது. எனவே, நம் தமிழீழ விடுதலைப் போராளிகளுக்குத் தேவையான வெடிகுண்டுகளை, நீங்கள் இந்தத் 'தீபாவளி' வெடிகளுக்குப் பயன்படுத்தும் மருந்துகளைக் கொண்டு செய்து தருவீர்களானால், சீரழிந்து கொண்டிருக்கும் நம் தமிழினம் உய்ந்துவிட வழிபிறந்து விடும்! செய்வீர்களா? இல்லையெனில், நீங்களும் அழிந்து, உங்கள்

'பட்டாசு'த் தொழிலும் அழிந்து, நம் வரலாறே அழிக்கப்பட்டுவிடும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்!

— பெருஞ்சித்திரன்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் பணந்தின்னிப் பேய்கள்! பகட்டு விளம்பரக் குடுகுடுப்பைக்காரர்கள்! ஏதிலிப் பிணங்களை எடுத்து மடியில் போட்டுக்கொண்டு, வழியில் போகிறவர்களைக் கறக்கும் பழிகார நரிக்குறவர்கள்! இந்த நிலையில் எங்களுக்குக் கிடைக்கும் தமிழீழப் பிணங்களை மட்டும் நாங்கள் சும்மா விட்டுவிட முடியுமா? மடியில் முடிந்த எங்கள் காசுகளை எடுக்கவியலாதபடி எங்களால் ஒப்பாரி மட்டுமே வைக்க முடியும்? மற்றதெல்லாம் எங்களால் எப்படி முடியும்? வீரம் என்பது எங்களுக்கு ஏது? அதுதான் இந்திராக்களின் கால்களில் ஏற்கனவே விழுந்துகிடக்கிறதே!

எப்படியோ, நீங்கள்தாம் உங்களுக்காகப் போராட வேண்டும். உங்கள் மூச்சியக்கம் உள்ளவரையிலும், இந்த ஏதுங்கெட்ட தமிழினத்திற்காகப் போராடுங்கள்! போராடிப் போராடிச் சாகுங்கள்! விடாதீர்கள்! எங்களுக்கும் அப்படிப்பட்ட நிலை ஒன்று வரும்வரை, எங்களால் எதுவுமே செய்ய இயலாது! அசையக் கூட முடியாது!

எவ்வாறேனும் கிளர்ந்து வரும் இலங்கைச் சிக்கலை இன்னும் ஓர் ஐந்தாண்டுக்குள் தீர்க்கவில்லையானால், இலங்கையில் உள்ள தமிழினமே முழுவதும் அழிந்துபட்டுப் போய்விடுமே! ஐயகோ! யார் தலையீடு செய்தாலும், என்ன வகைப் பேச்சுகள் நடந்தாலும் இறுதியில் தமிழீழம் பெறுவதே உங்கள் முடிவாக இருக்கட்டும்! மூச்சு முட்டப் போராடுங்கள்!

இன்னொன்றையும் உங்களிடத்தில் இந்த நேரத்திலேயே சொல்லிக் கொள்கிறோம். உங்களுக்கு எங்களால் எந்த வகையாலும் உதவமுடியா விட்டாலும், எங்களிடத்தில் உள்ள பணங்களையாவது உங்களுக்குத் தந்து உதவலாம்! ஆனால் அதையும் தரவியலாத பேராசைக்காரர்களாக நாங்கள் இருக்கிறோம்! எங்கள் குடும்பப் பாசங்களும், வாழ்க்கை ஆசைகளும் பதவி அங்காப்புகளும் அவற்றை உங்களிடத்தில் தூக்கித் தரவியலாமல், ஏன், கிள்ளியும் தர இயலாமல் எங்களைத் தடுத்துக் கொண்டு நிற்கின்றன!

எனவே, இலங்கை வங்கிகளில், அங்குள்ள முதலாளிகளின் வீடுகளில், நீங்கள் கொள்ளையடிப்பதைப் போல, எங்கள் இல்லங்களில் மூடிக் கிடக்கும் இரும்புப் பெட்டிகளையும் நீங்கள் கொள்ளையடியுங்கள்! அவற்றில் தேங்கிக் கிடக்கும் பண வெள்ளத்தையும் உங்கள் விடுதலை வயலில் பாயவிடுங்கள்! அப்போதாவது தமிழீழ விடுதலைப் பயிர் செழித்து வளரட்டும்!

அப்படியே, மாந்த இனக்கொலையிற் கொடியவன் செயவர்த்தனேவுக்கும் ஒன்றைச் சொல்லி வையுங்கள்:

இலங்கையில் உள்ள தமிழர்கள் அழிக்கப்பட்டால், அதையடுத்து, உலகின் எந்த மூலையில் போய் ஒளிந்து கொண்டிருந்தாலும், அங்குள்ள சிங்களவர்கள் அனைவரும் தேடிப்பிடித்து ஒருவர் கூட எஞ்சாமல் திட்டமிட்டு, அழிக்கப்படுவார்கள் என்பதை அவ் வரக்கனுக்குக் கூறி எச்சரிக்கை செய்யுங்கள்.

இறுதிவரை உங்கள் மூச்சுகளே உங்களுக்கு உதவட்டும்! உங்கள் கைகளே உங்களுக்காகப் போராடட்டும்! உங்கள் தோள்களே உங்கள் துமுக்கிகளைச் சுமந்து திரியட்டும்! மீண்டும் சொல்கிறோம்! உங்களுக்காக நீங்களே போராடுங்கள்! எங்களை நம்ப வேண்டாம்! நாங்கள் உங்களை விட அடிமைகள்! நாடி நரம்பில்லாதவர்கள்! கோழைகள்! எங்கள் உரிமைக்கே போராடாத இளித்தவாயர்கள் நாங்கள்! 0

# சாதியே நம்மை முன்னேறவிடாமல் தடுக்கிறது

# ஈழம் - ஒரு கண்ணோட்டம்

இரும்பிடர்த்தலையார்

பேச்சுவார்த்தைகளின் மூலம் முடிந்துவிடும் என்று எதிர்பார்த்த ஈழப் போர் தொடர்கிறது. சிங்கள வல்லாண்மையர் துமுக்கிகள் மூலமே பேசுகின்றனர்.

ஈழத் தமிழர்களும் தாய்த்தமிழ் நாட்டில் வாழும் தமிழ் நெஞ்சங்களும் படும் நெஞ்சத் துயருக்கும் சிந்தும் குருதி, குருதிக்கண்ணீருக்கும் அளவில்லை.

செயலாற்ற வேண்டியவர்கள் செயலற்றிருக்கிறார்கள் செயலாற்ற வேண்டியவர்களைத் தூண்டவேண்டியவர்களும் தூங்கிக்கொண்டு - அல்லது தூங்குவது போல் நடித்துக்கொண்டு - கடமையை மறந்து செயலற்றிருக்கிறார்கள்.

ஆந்திராவில் அமைச்சரவை மாற்றப்பட்டதற்கு அங்கு ஏற்பட்டுள்ள கொந்தளிப்புக்கு அளவில்லை. தொடர்வண்டிகள் தடை செய்யப்பட்டன.

ஆந்திராவில் மட்டுமன்று. இந்தியா முழுவதும் கொந்தளிப்பு. வட இந்தியத் தலைவர்கள் எல்லாரும் உடனே மாநாடு கூட்டிப் போராட்டம் அறிவித்தார்கள். உடனே ஊர்வலம், ஆர்ப்பாட்டம், பொதுக் கூட்டம். நாடு முழுவதும் முழு அடைப்பு நடத்த வேண்டும் என்று அறிவிப்பு. அக்கூட்டத்தில் நம் தமிழ்நாட்டுத் தலைவர்களும் கலந்துகொண்டனர். பாராட்டவேண்டியதே

ஆந்திரச் சிக்கல் குறித்துக் காட்டும் தீவிரத்தை வடநாட்டுத் தலைவர்கள் தமிழர் நிலைகுறித்துக் காட்டினரா? உடனே மாநாடு கூட்டினரா? ஊர்வலம், ஆர்ப்பாட்டம், பொதுகூட்டம், முழு அடைப்பு நடத்தினரா? என்று கேட்டால் 'இல்லை' என்ற விடைதான் கிடைக்கிறது. பாராளுமன்றத்தில் பேசுவதோடு நிறுத்திக் கொள்கிறார்கள். தமிழ் மக்களும் தமிழ் நாட்டுத் தலைவர்களும் இதை அறிந்து கொண்டனரா?

தமிழ்நாட்டு மக்களும் தமிழர் சார்புடைய அரசியல் இயக்கங்களும் ஈழத் தமிழரும் இலங்கையில் வாழும் இந்தியத் தமிழரும் இந்தியப்படை இலங்கைக்குச் செல்லவேண்டும் என்பதனையே முழு மனத்தோடு விரும்புகின்றனர்.

மதுரை மடத்துத் தலைவரும் அண்மையில் 'தேவி' இதழுக்கு அளித்துள்ள நேர்வுரையில் (பேட்டியில்) இதனையே வலியுறுத்தியுள்ளார். 'போராடும் ஈழ மக்களுக்குப் போர்க் கருவிகள் கொடுக்கலாம். பொன் கொடுக்கலாம்' என்று சொல்லியிருக்கிறார். தமிழ் நாட்டில் கூட இ'து எவர் காதிலும் விழுந்ததாகத் தெரியவில்லையே.

இந்நிலையில் என்ன செய்யலாம் என்று எண்ணிப் பார்க்கும் போது கீழ்க்காண்பவை நம் கருத்தில் தென்படுகின்றன. பொறுப்பில் உள்ளவர்கள் பார்வைக்கு அவற்றை எடுத்துரைப்பது நமது கடமையாகிறது.

இந்திய அரசு :

(1) இந்தியாவின் தலைமை அமைச்சர் (பிரதமர்) இலங்கைக்கு இறுதி எச்சரிக்கை ultimatum) கொடுக்கவேண்டும் என்பதுசிலர் கருத்து :

கொடுக்கலாம். அதற்குப் பலன் இருக்குமா என்பது ஐயம். இந்திரா அம்மையாரிடம் செயவர்த்தனவுக்கு அச்சம் இருந்தால் இப்படி நடப்பாரா? இந்தியாவில் இருக்கும்போது சொல்வது ஒன்று. இலங்கையில் போய்ச் செய்வது ஒன்று. எனவே அவர் அஞ்ச மாட்டார். அமெரிக்காவும் அதன் குள்ள நரிக்கூட்டமும் தனக்குத் துணை என்ற துணிவிலேயே அவர் 'நூறு இந்தியா வந்தாலும் என்னை அசைக்க முடியாது' என்று கூறினார். நாம் அதைக் கேட்டும் சும்மா இருந்துவிட்டோம்.

2-1 : இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்பது பலர் கருத்து

ஈழச் சிக்கலைத் தீர்ப்பதற்கு அஃது ஒன்றே உறுதியானதும் இறுதியானதுமான வழி. இதனைப் பிந்திப் போடப்போட நமக்குத் தொல்லை அதிகம்.

இளைதாக முள்மரம் கொல்க களையுநர் கை கொல்லும் காழ்த்த விடத்து

என்பது தமிழ்மறை 83 ஆம் ஆண்டைவிட 84ஆம் ஆண்டில் இலங்கையின் வலிவு அதிகம். ஒவ்வொரு நாளும் கருவிகள் அங்கு சென்று கொண்டே இருக்கின்றன. அந்த அளவு கருவிப் பெருக்கம் ஏற்பட்டால் அங்கு செல்லும் நம் படைகளுக்கு எதிர்ப்பு அதிகம் இருக்கும். அதனால் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் முடிப்பது நல்லது.

2-2. இந்தியா படை எடுத்தால் உலகப் போர் வெடிக்கும் என்பது தவறான புலம்பல்.

ஆப்கானித்தானத்தில் உருசியா புகுந்தது. பாக்லாண்டை இங்கிலாந்து கைப்பற்றியது. கிரனேடாவை அமெரிக்கா கைப்பற்றியது. யார் என்ன செய்துவிட்டார்கள்? அதேபோல் இந்தியா படையெடுத்தாலும் ஒருவரும் ஒன்றும் செய்துவிடமாட்டார்கள். ஓலமிடுவதோடு சரி.

அமெரிக்கா எப்போதுமே நேரடியாகத் தலையிடாது. தன் அடிவருடி நாடுகளையே அனுப்பும். இப்போது அதனையே செய்கிறது.

அமெரிக்கா தலையிட முயற்சி செய்தால் உருசியா எதிர்க்குரல் கொடுத்தால் அமெரிக்கா அடங்கி விடும்.

எனவே சிறு போர் பெரும்போராக மூள வாய்ப்புண்டு என்று சொல்வதில் பொருளில்லை.

2-3. இலங்கைக்கு இந்தியப்படைகளை அனுப்பினால் வடக்கே பாக்கித்தான், சீன எல்லைகளில் நமது காவல் வலுக்குறையும் என்பதும் தவறு.

தென்னிந்தியா இந்தியப் படையின் தெற்கு ஆளுமையின் கீழ் (Southern Command) அமைந்திருக்கிறது. வடக்கு, மேற்கு எல்லைகளில் தெற்குப் படைப் பிரிவுக்கு வேலை இல்லை.

இலங்கைக்கு அதிகப்படை அனுப்ப வேண்டியது இல்லை. குறைந்தது 5000 பேர் (ஒரு பிரிகேட்); கூடியது 20000 பேர் (ஒரு டிவிசன்) கொண்ட படை போதும்.

பஞ்சாபிற்குள் எவ்வளவு வீரர்கள் அனுப்பப் பட்டுள்ளனர். அது தாக்குண்டதா?

2-4. தமிழர்கள் இலங்கை முழுவதும் பரந்து வாழ்கின்றனர். இந்தியா படை எடுத்தால் அவர்கள் தாக்கப்படுவர் என்பதும் பொருளற்றது.

இலங்கை முழுவதும் தமிழர் பரந்து வாழ்ந்த காலம் ஒன்றுண்டு. சென்ற சூலை'83 காலத்திற்குப் பின்னர், சிற்றூர்ப் பகுதிகளில் தனித் தனியாக வாழ்ந்தவர்கள் கொல்லப்பட்டவர்கள் தவிர எஞ்சியவர்கள் பாதுகாப்பான பகுதிக்குச் சென்றுவிட்டனர். பலர் ஏதிலிகளாக இந்தியாவுக்குத் திரும்பினர். பலர் ஏதிலிக் குடியிருப்புகளில் அடைபட்டுக் கிடக்கின்றனர்.

இந்தியப் படைகளைச் சந்திக்க முடியாமல் சிங்களவர்கள் ஒன்றுமறியாத் தமிழர்களைத் தாக்கினால், கொடுமையான பழிவாங்குதல் நடைபெறும் என்ற எச்சரிப்புப் பலன்தரும்.

சிங்களக் காடையர்களுக்கு எல்லாம் போர்ப் பயிற்சி அளித்தும் படைக்கருவிகள் கொடுத்தும் படையினர் எண்ணிக்கையைப் பெருக்கியும் வருகிறார்கள். தற்பாதுகாப்புத் திட்டம் என்ற போர்வையில் சிங்களக் குடும்பங்கள் அனைத்திற்கும் துமுக்கிகள் கொடுக்கும திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்படும் முன் நாம் செயல்படுவது நல்லது.

எல்லாவற்றிற்கும் மேலாக இதைக் கவனிக்க வேண்டியது இந்தியப் படையினர் பொறுப்பு, அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். மற்றவர்கள் சும்மா இருப்பதே நல்லது.

2-5. இந்தியா படையெடுத்து ஈழத்தை மீட்டாலும் அந்நாடு தனித்து வாழ முடியாத வளங்குறைந்த நாடு என்பதும் தேவையற்றது.

பாலைநிலத்தில் அமைந்த நாடு இசரேல். இன்று எப்படி மாறி இருக்கிறது!

அமெரிக்காவிடமிருந்து உருசியா கோதுமை வாங்கவில்லையா?

ஈழத் தமிழர்கள் தங்கள் நாட்டைத் தாங்களே முன்னேற்றிக் கொள்வார்கள். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் அதற்குப் பணியாற்றுவார்கள்.

2-6. மலைப் பகுதிகளில் வாழ்கின்ற தோட்டத் தொழிலாளர்கள் நிலை என்ன என்ற ஐயமும் தேவையில்லை.

மலைப் பகுதியில் இந்தியத் தமிழர்களான தோட்டத்தொழிலாளர்கள் அதிகம் வாழ்வதால், அந்நடு மாகாணம் தனி மாகாணம் ஆக்கப்பட்டுத் தேவையான ஒப்பந்தங்கள், விதிமுறைகளை வகுத்து இரு சாரார் ஒப்புதலுடனும் ஈழத் தமிழ் நாட்டில் இணைக்கப்படலாம்.

2-7. ஈழ விடுதலை இயக்கங்கள் பல இருக்கின்றனவே! நாட்டை மீட்டு ஆட்சிப் பொறுப்பை யாரிடம் கொடுப்பது என்பதும் பொருளற்றது

தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ள அமைப்பு தமிழர் ஒன்றிய விடுதலை முன்னணி அதுவே இப்போது அங்கு முறையாக இயங்கிவரும் அரசியல் இயக்கம். மற்றவர்கள் இவ்வியக்கத்துடன் இணைந்து செயல்படுவார்கள். எனவே இ'து ஒரு பெரிய தடை அன்று.

(இதழாசிரியர் குறிப்பு : கட்டுரையாசிரியரின் இந்தக் கருத்து ஒரு பொதுவான கருத்தே. தமிழீழ ஒன்றிய முன்னணியினரின் நடைமுறைகளை, இக்கால் உள்ள இளைஞர் விடுதலை இயக்கங்கள் பல ஆதரிக்கவில்லை என்பதை நாம் கவனிக்கவேண்டும். ஆகவே, தமிழீழம் ஏதோ ஒரு வகையில் கிடைத்தால், அஃது எந்த வகையில் கிடைக்கிறதோ, அந்த வகையாகவே தமிழீழ ஆளுமை அமைப்பையும் வகுத்துக் கொள்வார்கள் என்பதே இப்பொழுதைக்குச் சரியான கருத்தாக இருக்கும்.)

(3) ஈழத் தமிழர்களுக்கு இந்தியாவில் போர்ப் பயிற்சி அளித்துப் படைக்கருவிகளும் கொடுக்கலாம்.

வங்காள நாட்டு விடுதலைக்கு முன் இந்தியா இதைத்தான் செய்தது. இப்போதும் செய்யலாம்.

(4) ஈழத்திற்குள் ஊடுருவல்காரர்களை (Inflitraters) அனுப்பலாம். பாக்கிசுத்தான் காசுமீரத்தில் இதைத்தான் செய்கிறது.

(5) தமிழ் நாட்டில் இருக்கும் முன்னாள் படை வீரர்களுக்குப் போர்க் கருவிகள் கொடுத்து அவர்களை ஈழ மீட்புக்கு அனுப்பலாம்.

இப்படிச் செய்தால் உலகில் யாரும் குறை சொன்னாலும் நாம் அதை எளிதில் மறுத்துவிடலாம். "அவர்கள் இந்தியப் படையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள். அதனால் அவர்கள் செயலுக்கு இந்திய அரசு பொறுப்பு ஏற்க முடியாது" என்று மறுத்துவிடலாம்.

இலங்கையில் இங்கிலாந்தின் கூலிப்படை இருக்கிறது இங்கிலாந்தைக் கேட்டால் "அவர்கள் படையிலிருந்து ஓய்வுபெற்றவர்கள். அதனால் அவர்களை இங்கிலாந்து அரசு கட்டுப்படுத்த இயலாது" என்று இங்கிலாந்து அரசு கூறுகிறது. உலக நாடுகளும இதை ஏற்றுக்கொள்கின்றன. அப்படியானால் அதே விடையை நாம் சொல்லும் போதும் உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டுத் தலைவர்கள்

(1) நடுவண் அரசுக்குத் தீவிரமான நெருக்கடியைக் கொடுக்க வேண்டும்.

(2) தமிழ் நாட்டுத் தலைவர்கள் தங்களிடையே கருத்து வேறுபாடுகளை மறந்து சொந்த விருப்பு வெறுப்புகளைச் சற்று ஒதுக்கிவிட்டுத், தன்மதிப்பைப் பார்க்காமல் ஒன்றுபட்டு ஒரே அணியாகத் திரள வேண்டும்.

(3) ஆர்ப்பாட்டங்கள், அடைப்பு, மறியல் போன்ற வழிகளின் மூலமாக நடுவண் அரசின் கவனத்தை ஈர்க்கலாம்.

(4) விடுதலைப் புலிகளுக்குத் தமிழ் நாட்டில் பயிற்சி அளிக்கலாம்.

(5) அவர்களுக்குத் தேவையான படைக்கருவிகள் வாங்கிக் கொடுக்கலாம்.

(6) அவர்களுக்குத் தேவையான பண உதவிகள் செய்யலாம்.

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம் பார்க்க)

## எச்சமயத்தும் 'தமிழர்' என்றே தம்மின்

ஈழம் ஒரு கண்ணோட்டம் . . .

4-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

பாவலரேறு அவர்களும் உருபா 50 கோடி அளவில் விடுதலைப் புலிகளுக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள்.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூறிய தில் — என்பது வள்ளுவர் வாய்மொழி.

(7) மணி விழா, மலர் வெளியீடு, மாநாடு என்று இயக்கத் தொண்டர்களிடம் வணிகர், மக்களிடமும் பணம் தண்டுவது போல 'ஈழமீட்பு' என்றே பணம் தண்டி விடுதலைப் புலிகளுக்குக் கொடுக்கலாம். (ஆனால் இதை மிகவும் திட்டமிட்டு மிகப் பொறுப்பான ஒரு குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். அல்லாவிடில் இப்பொழுது போல் தந்நலக்காரர்களே பயன் பெறக் கூடும் — இதழாசிரியர்)

(8) ஒரு பட்டாளம் (Battalion) அமைக்கும் பொறுப்பை ஒரு மாவட்டம் ஏற்றுக் கொள்வது என்பதுபோல் பங்கிட்டுப் பணம் பிரிக்கலாம்.

பாலத்தீன விடுதலை இயக்கம் (P.L.O.) பாலத்தீன நாட்டிற்கு வெளியேதான் இயங்குகிறது. அதற்குத் தேவையான பணம், படைக்கருவிகள், பயிற்சி எல்லாவற்றையும் அரபு நாடுகளே அளிக்கின்றன.

பாகிசுத்தானில் ஒரு சிறுபடை (Brigade) அமைப்பதற்குத் தேவையான முழுச்செலவையும் சவூதி அரேபியா ஏற்றுக்கொண்டது.

உலகில் யாரும இதைத் தவறு என்று சொல்லவில்லை. என்றால் ஈழத் தமிழருக்கு இந்தியத் தமிழர் உதவுவதில் யார் தவறு காணக் கூடும.

பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற வகையில் அமெரிக்காவும அதன குட்டிச்சாத்தான்களும் அரபு நாடுகளுக்கும் நண்பர். இசுரேலருக்கும் நண்பர்.

(9) 1983 படுகொலை முடிந்து ஓராண்டு ஆயிற்று. அந்த நேரத்தில் தமிழினத் தலைவர்கள் செய்த ஆரவாரம் பெரிது. இந்த ஓராண்டுக் காலத்தில் அவர்கள் உருப்படியாகச் செய்த அரிய விளைவு என்ன என்று எண்ணிப் பார்த்தால் ஒன்றுகூட இல்லை.

இந்நிலையை மாற்றி இனித் தீவிரமாகப் பாடுபட வேண்டும். ஈழம் விடுதலை பெறுவது வரை ஓய்வதில்லை என்று உழைக்க வேண்டும்.

ஈழத் தமிழர்கள் :

(1) நமக்கு நாம் பகைவர் அல்லர். எல்லாருக்கும் பொது எதிரி செயவர்த்தனே, பிரேம தாசா, அதுலத் முதலி மற்றும் அவர்கள் போன்ற சிறு நரிக்கூட்டம். சிங்கள மக்கள் அல்லர். இந்தப் பொதுப் பகையை வேரறுக்க நமக்குள் ஒற்றுமை தேவை. நம்மிடையேவுள்ள வேற்றுமைகளை எல்லாம் மறந்து மீண்டும் எழ முடியாமல் ஒரேயடியாகக் குழிதோண்டிப் புதைத்து விட்டு- ஒன்றுபட்டுப் போராட வேண்டிய நேரம். 'இப்போதில்லை என்றால் ஒரு போதும் இல்லை' என்ற முடிவோடு இணைந்து, முனைந்து போராட வேண்டிய நேரம். எனவே முதலில் ஒன்று சேருங்கள். தமிழகத் தலைவர்களைப் போல பிளவுபடாதீர்கள்.

(2) 'கொக்கொக்கக் கூம்பும் பருவத்து . . .'
'காலங் கருதி, இருப்பர் கலங்காது'
ஞாலம் கருது பவர் — என்பன தமிழ் மறை.

தேவையான முழு வலிமையையும் திரட்டிக்கொள்ளும் வரையில் சற்று அமைதியாக இருப்பது நல்லது.

உங்கள் கையில் கொஞ்சம் படைக்கருவிகள் கிடைத்தவுடன் தாக்குதலைத் தொடங்கிவிடுகிறீர்கள். சிங்களப்படை முழுவதும் வரும்போது எதிர்த்து நிற்க முடியவில்லை. உங்களைத் தொட முடியாத சிங்களப் படை, பெண்களையும் குழந்தைகளையும் மாய்க்கிறது.

எனவே சிங்களப்படை முழுவதும் வந்தாலும் எதிர்க்கும் ஆற்றல் பெறும் வரை கொஞ்சம் அடங்கியிருங்கள்,

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து — என்பது தமிழ் மறை.

(3) தேவையான எல்லாப் படைக்கருவிகளையும் திரட்டிக்கொள்ளுங்கள்.

கொரில்லாப் போருக்குப் பொறித்துப்பாக்கிகளும், வெடிகுண்டுகளும் போதும். கப்பல்படை, தகரி (பீரங்கி) கொண்டு எதிரி தாக்கும் போது அவை பயன்படா. எனவே அவற்றையும் தடுத்து நிறுத்தும் கருவிகளையும் திரட்டிக்கொள்ளுங்கள்.

(4) வெளிநாடுகளில் சென்று வாழும் தமிழர்கள் அங்கங்கே பொருள் திரட்டித் தாய் நாட்டிற்கு அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் உங்கள் ஊதியத்தில் ஒரு பகுதியை இப்பணிக்கு ஒதுக்கலாம். அங்கங்கே பெறமுடிந்த போர்க்கருவிகளையும் பெற்று அனுப்புங்கள்.

(5) உலக முழுவதும் செய்திப் பரப்பல் (பிரச்சார விளம்பரம்) நமக்கு மிக மிகத் தேவை.

நீங்கள் வாழும் நாடுகளிலுள்ள முகாமையான செய்தித்தாள்களில் விளம்பரம் மூலம் ஈழச் செய்திகளை வெளியிட்டு அந்நாட்டு மக்கள் உண்மையைத் தெரித்துகொள்ள வழி செய்யுங்கள். இலங்கை அரசின் பொய்ச்செய்திகளை மறுக்கும் வண்ணம் உண்மையை எடுத்துச் சொல்லுங்கள். இதற்குச் செலவாகும் பணம் செலவு அன்று. உலக மக்கள் நம் நிலையை அறிந்து கொள்ள உதவும். உலக ஆதரவு நமக்குத் தேவை. பிற நாட்டு உதவி தேவை, சரி என்ற கருத்தை அது உருவாக்கும்.

(6) பிறநாட்டு உதவியை முடிந்த அளவு தேடிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

அரபு நாடுகள் இலங்கையின் செயல்கண்டு கொதிப்படைந்து இருக்கும் இந்நேரத்தில் அவர்கள் உதவியைப் பெற முயலலாம். அவர்கள் புதிய போர்க் கருவிகள் வாங்கும்போது, அவர்கள் கழித்துவரும் பழைய கருவிகளும் நமக்குப் பயன்படும். வெல்க! வாழ்க! !

# அனைத்து இந்திரா வானொலி!

# All Indira Radio!

## வானொலியையும், தொலைக்காட்சியையும் தம் கையகப்படுத்தப் பார்க்கிறார், இந்திரா!

இந்தியாவை ஆளுவதென்றால், இந்திராவைப் பொறுத்த வரையில் பொதுமக்கள் தொடர்புக் கருவிகளாகிய தொலைக்காட்சி, வானொலி இவற்றையும் ஆண்டாக வேண்டும் என்று பொருள். இந்திராவின் முகமும், குரலும், நாள்தோறும் 11 கோடி இந்திய மக்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. இந்திராவின் இந்த 'சொரிந்து கொடுக்கும் செயல்' எழுபதுகளில் இருந்ததைவிட இப்போது அதிகரித்துள்ளது. இவருடைய புகழ் பாட வேண்டி, மக்களை சந்திக்க வேண்டிய அறிவியல் மற்றும் பிற முகாமையான செய்திகள், வானொலி, தொலைக்காட்சிகளிலிருந்து அப்புறப்படுத்தப்படுகின்றன. இவருடைய புகழைத் தேசிய நிகழ்ச்சிகளில் தலைப்புச் செய்திகளாக மணம்பெற வேண்டி எல்லா வகை வழிமுறைகளும் முயற்சி செய்யப்படுகின்றன. 'ராசீவ்' — ஆளும் கட்சியின் ஐந்து பொதுச்செயலாளர்களில் ஒருவர், எவ்வகை அரசு அதிகாரமுமில்லாதவர், தொலைக்காட்சி, வானொலிகளில் அதிக முகாமைப்புள்ளியாகத் திகழ்கிறார்.

1. 1983 சூன் — சூலை மாதங்களில் மட்டும், தேசிய நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்ட 913 நிமைய வானொலி நேரத்தில், 200 நிமையங்கள் இந்திராவின் செயல்களை வானொலி ஒலிப்பரப்பியிருக்கிறது.

2. சூலை மாதம் மட்டும் தேசிய ஆங்கில ஒலிபரப்பில், ஒன்பது முறை ராசீவ் குறிப்பிடப்பட்டிருக்கிறார். அரசு பதவியில்லாத வேறு எந்த அரசியல் தலைவரும் இந்தப் பெருமையைப் பெற்றதில்லை.

3, தொலைக்காட்சியில் ராசீவைப்பற்றிக் குறிப்பிடும் போது, அவருடைய புகைப் படத்தையோ, ஒளிநாடா மூலம் பதிவு செய்யப்பட்ட அவரின் காட்சிகளையோ காட்டத் தவறுவதில்லை. இந்த முகாமை இந்திராவுக்குக் கூட கொடுக்கப் படுவதில்லை.

4. சூன் மாதத்திலிருந்து, மற்போர் போட்டித் தொடக்க விழாவில் கலந்து கொள்வதிலிருந்து பழ ஏற்றுமதி பற்றிய மாநாடு வரை ராசீவின் எல்லா நிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சியும், வானொலியும் ஒலிபரப்புகின்றன.

ராசீவ் காந்தியின் நீண்ட நேர (Unedited) பேச்சுகளை ஒலிபரப்புவதற்காக வேண்டி, அனைத்து இந்திய வானொலியின் இரவு நேரப் பிற நிகழ்ச்சிகள் நீக்கம் செய்யப்படுவது வாடிக்கையாகிவிட்டது,

தற்போது, அனைத்து இந்திய வானொலியின் மீது, பேராயக்கட்சி ஆட்சி செய்யாத மாநிலங்கள் நிறைவடையாதிருப்பதைப் போல வேறு எப்போதும் அடைந்ததில்லை. அந்த அளவிற்கு எதிர்க்கட்சிகள் சிறுமையாக மதிக்கப்பட்டு, இழிவு படுத்தப்படுகின்றன. இதனாலேயே, மாநிலத்துக்குச் சொந்தமான 'காசுமீர் வானொலி நிலையத்தை' திறக்கப் போவதாக, பரூக் அப்துல்லா நடுவண் அரசை மிரட்டியிருந்தார்.

தேசிய சொத்தைத் தவறாகப்பயன்படுத்துவதை, வெளிப்படையாகவே கண்டித்திருக்கிறார் சோதி பாசு. மேலும், அண்மையில் வானொலியில் பேச, என். டி. இராமராவ் மறுக்கப்பட்டிருக்கிறார்.

சூன் மாதத்தில் மட்டும் இந்தியாவின் 86 நிலையங்களிலிருந்து ஒலிபரப்பப்பட்ட தேசிய ஆங்கிலச் செய்திகள் 31 இல் 18 இந்திராவைப் பற்றியது,

சூலை 1முதல் ஆகத்து 1 வரை, பதிவு செய்யப்பட்ட அவரின் பேச்சுகள் (மிகுதொலைவிலுள்ள நிலையங்கள் தவிர) மற்ற எல்லா நிலையங்களிலும் ஒலிபரப்பட்டன. 200 நிமையங்களைக் கவர்ந்து கொண்ட இந்தப் பேச்சுகள் அப்படியொன்றும் முகாமையான செய்திகளைக் கொண்டதல்ல.

சூலை 29-ஆம் பக்கல் 9-45 நிகழ்ச்சி நீக்கம் செய்யப்பட்டு, சிக்கிம், காங்சுடாக்கில் இந்திரா நிகழ்த்திய உரையை ஒலிபரப்பியது 'ஆல் இந்தியா ரேடியோ'.

அடுத்த நாள் மறுபடியும் 'நமது விருந்தினர்' என்ற நிகழ்ச்சியில் இந்திரா செவ்வியளித்தார். அவருடைய 'காங்டாக்' உரை ஒருவரிவிடாமல் மறுபடியும், ஒலிபரப்பப்பட்டது. ஆகத்து 1 ஆம் பக்கல் மறுபடியும் அலகாபாது தொலைக்காட்சி நிலையத் திறப்புவிழாவில் இந்திரா நிகழ்த்திய 30 நிமைய உரை ஒலிபரப்பப்பட்டது.

இந்தியாவின் 86 வானொலி நிலையங்களிலும் படிக்கக்கப்படும் செய்திச்சுருள்களில் தலைப்புச்செய்திகளாகவோ அல்லது முதல்செய்தியாகவோ இந்திராவைப் பற்றி இல்லாவிட்டால், மற்ற செய்திகள் அன்றாட நாட்டு நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டு, தொடர்புபடாத செய்திகளாகவே அமைகின்றன.

குறிப்பாக, சூலை 22ஆம் பக்கல், வேறு முகாமையான நிகழ்ச்சிகள் எதுவும நடை பெறாதது போல் உரு 245கோடி செலவில் அமைக்கப்பட்டகல்பாக்கம் அணுவாற்றல் நிலையத்தை மறுநாள் இந்தியாவுக்கு இந்திரா படைக்கப்போகும் செய்தியோடு செய்திச்சுருள் தொடங்கியது. ஆக, இந்திராவின் தமிழக வருகையைப் பற்றிக் குறிப்பிடுவதைக்கூட மிக முகாமையான செய்தியாகக் கருதப்பட்டது.

அன்று நடந்த முகாமையான நிகழ்ச்சிகள்.

1. தூக்குத் தண்டனை மீதான 'பொது நீக்கத்தை எதிர்த்து உயரறமன்றத்தின் தீர்ப்புக் கூறியது.

2. சீக்கியர்களுக்கும், பஞ்சாபு காவலர்களுக்கு மிடையே பெரும் கலவரம் நடந்தது.

3. ஆந்திராவில் பதிவு செய்யப்படாத அதிகாரிகளின் போராட்டத்தின் போது, எந்த வகைக் கட்டுப்பாடுமின்றிப் போராளிகள் மாநில அரசோடு பேச்சு நடத்தலாம் என என். டி. இராமராவ் அறிவித்தார்.

4. நடுவண் அரசின் உயர் அதிகாரிகள் கன்னுபின்னு வென்று பதவிமாற்றப்பட்டனர். இந்தச் செய்திகளில் எதுவும் அன்றைய செய்தி ஒலிபரப்பில் இடம் பெறவில்லை.

ராசீவை தேசியத்தலைவராக்கவேண்டி, எல்லா வகையான உத்திகளும் கையாளப்படுகின்றன. ராசீவ் காந்தி என்ன உளறினாலும் அதை வேதஉரை

தொடர்ச்சி 6- ஆம் பக்கம் பார்க்க

# இனப் பெயரை மொழியாலே தெரியச் செய்க!

## அனைத்து இந்திரா வானொலி!......

(5-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

யாக எடுத்துக்கொண்டு வானொலியும், தொலைக் காட்சியும் ஒலிபரப்புகின்றன.

இலக்னோவில் வேட்டையாடும் விளையாட்டுக் கலைத் தடுக்க சட்டம் இயற்றப்படவேண்டும் என்று ராசீவ் பேசியதை அனைத்து இந்திய வானொலி ஒலி பரப்பியது. இதற்கு முன்பே ஒரு சட்டம் இருக்கிறது என்பதை ராசீவோ, ஒலிபரப்பியவர்களோ அறிந் திருந்ததாகத் தெரியவில்லை.

ராசீவ் எங்கு சென்றாலும், கூடவே தொலைக் காட்சி மற்றும் வானொலி அலுவலர்கள் படப்பிடிப் பாளோடும், நாடாப்பதிவாளோடும் பின் தொடர் கிறார்கள். அவர் நிகழ்த்தும் உரைகள், கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் அனைத்தும் தேசியத் தகுதி யைப் பெறுகின்றன.

0 தற்போது ஒலிபரப்பப்படும் செய்திகளின் உள்ளடக்கம் ஒலிபரப்புக் கொள்கைகளுக்கு முரணாதாக இருக்கின்றது. 1980 இல் நடுவண் அரசால் அமைக்கப்பட்ட 'தொடர்புக்கருவி ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளை மீறுவதாக அமைந் திருக்கிறது.

சென்ற] ஆண்டு புதிய கொள்கைகளை அந்தக் குழு வரையறுத்தது.

1, நடுவண் அரசின் எந்த ஒர் அமைச்சகத்தின் அறிக்கையானாலும் சரி, குறிப்பாகத் தலைமை அமைச்சரின் அறிக்கைகள், தேசியக் கொள்கைகளை மக்கள் அறிந்து கொள்ள முகாமையானவையாக அமைகின்றன. இருந்தாலும், முகாமை செய்தி களுக்குத் தரப்படவேண்டுமே தவிர தனி ஆளுக் கன்று.

2. அரசியல் கருத்தாடல்களை ஏற்படுத்தக் கூடிய செய்திகளைக் குறிப்பிடும்போது, ஒலிபரப்புத் துறை சரியான வழியில் அறிவுறுத்தப்படவேண்டும்.

3. தகுதி வாய்ந்ததா இல்லையா என்று நன்கு அலசிய பின்னரே, அரசியல் பணிகள் குறிப்பிடப் படவேண்டும்

4. அரசு அறிக்கைகளைப் பொறுத்தவரையில் தேசிய கொள்கைகளை உள்ளடக்கியிருந்தால் மாத்திரமே அவை அரசுச் செய்தியாகக் கருதப்பட வேண்டும்.

தொலைக்காட்சியும், வானொலியும் ஒருதலைப் பக்கமாக நடந்துகொள்வதை ஒப்புக் கொண்ட ஒலிபரப்புத்துறை அமைச்சர், மேலே குறிப்பிடப் பட்ட புலனங்களை ஒலிபரப்புத்துறை கையாளுகிறது என்றும் அண்மையில் கூறியிருக்கிறார். மேலும், இந்திரா, அடிக்கடி வானொலியிலும், தொலைக்காட்சி யிலும் குறிப்பிடப்படுவது, அவர் ஒரு தலைமை அமைச்சர் என்பதால் மட்டுமே தவிர, ஆளும் கட்சி யின் தலைவர் என்பதாலன்று, என்றும் கூறியிருக் கிறார்.

உண்மையில் பார்க்கப்போனால், அனைத்திந்திய வானொலி, தலைமையமைச்சர், ஆளும் கட்சித்தலைவி என்ற இரண்டு முகங்களை வேறுபடுத்திப் பார்ப்ப தாகத் தெரியவில்லை

அண்மையில் பாராளுமன்றக் கூட்டத்தொட ரின் போது, பெங்களூர் பேராயத் தொழிலாளர் மாநாட்டில், இந்திரா எதிர்க்கட்சிகளைக் கடுமை யாகத் தாக்கிப்பேசியதை அனைத்திந்திய வானொலி ஒலிப்பரப்பியது. பாராளுமன்ற நிகழ்ச்சிகளின் போது, பாராளுமன்ற நடவடிக்கைகளைக் காட்டாது, தேர்தலில் தோல்வியுற்ற தன் கட்சிக்காரர்களுக்கு ஊக்க மூட்டவேண்டிப் பேசிய இந்திராவின் பேச்சை ஏன் ஒலிபரப்ப வேண்டும்?

மேலும் சூலை 21 அன்று பகுகுணாவின் தொகுதிக் குச் சென்ற இந்திரா, எதிர்க்கட்சிகளைக் கடுமையாகத் தாக்கிப் பேசிய நீண்ட பேச்சை தொலைக்காட்சியும் வானொலியும் ஒலிபரப்பியிருக்கின்றன. இதனால் சினமுற்ற பகுகுணா கூறுகிறார்; 'மேடக் தொகுதிக்கு நான் சென்று, பஞ்சாப் சீக்கியர்களின் சிக்கல் நீண்டுகொண்டே போவதற்கு இந்திராவின் மெத் தனப் போக்குத்தான் காரணம்' என்று தீவிரமாகத் தாக்கிப் பேசினால் அவை ஒலிபரப்பப்படுமா?' அல் லது எக்டே தில்லிக்குச்சென்று, இந்திராப் பேரா யத்தைப்பற்றித் திறனாய்ந்து சனதா கூட்டத்தில் பேசியிருந்தால் தொலைக்காட்சி அதை ஒலிபரப்புமா?

எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்புத் தருவதாக ஒலி பரப்புத்துறை அமைச்சர் பகத் காட்டிக்கொள்கிறார். ஆனால் எந்த வகையில்? சந்திரசேகரின் நடைச் செலவு (பாதயாத்திரை) தேசிய செய்தியில் இரண்டு முறையும், பம்பாய், சென்னைத் தொலைக்காட்சி நிலையங்களில் ஏழு முறையும் ஒலிபரப்பப்பட்டன. ஆனால் அவை வெறும் 'விளையாட்டு நிகழ்ச்சி' போலத் தான் காட்டப்பட்டன என்று தொலைக்காட்சி ஊழியர்களே ஒப்புக்கொள்ளுமளவிற்கு அமைந் திருந்தன.

சூன் 30 அன்று, இலங்கைத் தமிழர் விடுதலைக் காக எல்லா எதிர்கட்சிகளும் தலைமையமைச்சருக்கு ஒத்துழைப்புக்கொடுக்கும் என்று சகசீவன்ராம் வெளி யிட்டிருந்த அறிக்கையை 'எதிர்கட்சிகளுக்கான வானொலி நேரம்' என்ற நிகழ்ச்சியில் ஒலிபரப்பியது அனைத்து இந்திய வானொலி.

மேலும், பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது, மேற்குவங்காளத்தில் ஐந்தாயத் தேர்த லின் போது, கல்கத்தா வானொலி நிலையம் ஏன் ஒரு தலைப்பக்கமாக நடந்துகொண்டது என்று மார்க்சிய பா.உ. கேட்ட கேள்விக்கு ஒலிபரப்பு அமைச்சர் பகத் அளித்த செய்தி.

'கல்கத்தா வானொலி, முதல்வர் சோதிபாசு அவர்களுக்கும், இதர மார்க்சியத் தலைவர்களுக்கும் 56 நிகழ்ச்சிகளில் 582 வரிகளை அளித்தது. அதே பொழுது, பேராயக்கட்சி அமைச்சர்களுக்கும் பிற இந்திராப் பேராயத் தலைவர்களுக்கும் 73 நிகழ்ச்சி களில் 783 வரிகளை அளித்துள்ளது. உடனே சினம் கொண்டு எழுந்த மார்க்சியபா.உ. தீபன் இந்தஇரண் டில் எது பெரிது? என்று கேள்வி கேட்டு, ஒரு தலைப் பக்கத்தைக் கண்டித்தார்.

பேராயக் கட்சி ஆளாத மாநிலங்களில் செயல் திட்டப்பணிகள் ஒன்றுமே ஒலிபரப்பப்படுவதில்லை. அதே சமயம், நடைபெறாத செய்திகளையும் மிகைப் படுத்த, பேராயக்கட்சி ஆளும் மாநிலங்களில் நடை பெற்றது என்று ஒலிபரப்பப்படுகிறது.

இந்திராவின் தேர்தல் பரப்புதல்கள்கூட அரசுத் தொடர்பான செய்திபோல ஒலிபரப்பப்படுகின்றன. அண்மையில் சம்மு காசுமீர் தேர்தல் பரப்புதலின் போது, இந்தியாவுடன் எந்த நாடு மோதினாலும் சரியான எதிரடி கொடுக்கும், என்று பேசியதை அனைத்த இந்திய வானொலி ஒலிபரப்பியது. 'இது தலைமை அமைச்சர் என்ற முறையில் அவர் செய்த கொள்கையறிவிப்பா? அல்லது படைத்துறைக்கு ஊக்கமூட்டும்பேச்சா? அல்லது தேர்தல் பரப்புதலா?

'வானொலி முழுஉரிமையாகச் செயல்படுகிறது' என்று ஒலிபரப்புத்துறை அமைச்சர் பகத் குறிப் பிட்டிருக்கிறார். இந்திரா மீது 'சா' குழுவின் நடவடிக் கையைக்கூட ஒலிபரப்பியதன் மூலம் சனதா அரசு தான் இத்துறையைக் களங்கப்படுத்தியிருக்கிறது என்றும் கூறியிருக்கிறார். இப்படியிருக்க, பேராயக் கட்சி ஆளாத மாநிலங்களைப்பற்றிய குற்றச்சாட்டு கள் எல்லாவற்றையும் தற்போது அனைத்து இந்திய வானொலி ஒலிபரப்பிக் கொண்டிருக்கிறது.

சூலை 1 முதல் 10 வரை, ராசீவ், அருண் நேரு உட்பட எல்லாப் பேராயத் தலைவர்களும், சம்மு-காசுமீர் தேர்தலில் ஊழல் நடந்திருக்கிறது என்ற போலியான பரப்புதல் பேச்சுகளை அனைத்து இந்திய வானொலி ஒலிபரப்பியிருக்கிறது. ஒரு கட்டத்தின் போது 'தேர்தல் ஊழல்' என்ற போலிப்பரப்புதலை இ. பேராயத் தலைவர் பேச சிரிநகர் வானொலி நிலை யம் மறுப்பு தெரிவித்ததால், 24 மணி நேரத்திற்குள் பதவியைக் காலி செய்யவேண்டும் என்ற ஆணை நிலைய இயக்குநருக்குத் தொலைபேசி மூலம் பிறப்பிக் கப்பட்டது. தற்போது, அந்த நிலையம் இயக்குநர் இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது.

நெருக்கடி காலக்கட்டத்தின் போது நடந்தது போலவே, தற்போதும் இந்திரா இல்லத்திலிருந்து ஆணைகளும், ஒலிபரப்புக் கொள்கைகளும் பிறப் பிக்கப்படுகின்றன.

அண்மையில் என்.டி. இராமாராவ் வானொலியில் பேசமறுக்கப்பட்டிருக்கின்றார். அதுபொழுது நடுவண் மாநில (மத்திய பிரதேச) முதலமைச்சர் 1983-ஆம் ஆண்டில் முதல் ஏழு மாதங்களில் எட்டுமுறை பேச இசைவளிக்கப்பட்டிருக்கிறார். அதே பொழுது திரி புரா முதல்வர் நிருபன் சக்கரவர்த்தி இதுவரை வானொலியைப் பயன்படுத்தியதே இல்லை.

'ஒலிபரப்புத் துறையில் இயக்குநர் தலைவர் பதவிக்கு உண்டான தகுதிகள் 1) கல்வித்துறை அல்லது பண்பாட்டுத்துறை அல்லது மக்கள் தொடர் புத்துறை இவற்றுள் 18 ஆண்டு பட்டறிவு பெற்ற 'ஐ. ஏ. எசு' அதிகாரியாக இருக்க வேண்டும்.

2) இந்தியாவின் பண்டைப் பண்பாட்டையும் கலை, கலைநுணுக்க வெளிப்பாடுகள், பல மொழிகள் போன்ற பலவற்றையும் நன்கு தெரிந்தவராக இருக்கவேண்டும்.

ஆனால் இயக்குநராகப் பணிபுரியும் ஐ. ஏ. சு. அதிகாரியான வர்மா, மேற்கு வங்காளத்தில் சிறு தொழில் நிறுவனத்தில் பணிபுரிந்தவர். பின்னே எப்படி இவர் இந்தப் பதவியில் அமர்த்தப்பட்டார்?

மேலும் ஒலிபரப்புத் துறையில் பட்டறிவே இல்லாத இரண்டு இந்திய காவல் அதிகாரிகள் (IPS) துணை இயக்குநர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த அழகில்(!) தொலைக்காட்சி நிலையங்களை விரிவுபடுத்த 68 கோடி பொருள் ஒதுக்கப்பட்டுள் ளது. இதில் உரு. 28 கோடி விளம்பரங்கள் மூலம் கிடைத்த வருமானம். 1984 இறுதியில் நிறை வேறும் இந்தத்திட்டம், 1985 தேர்தலுக்காக உள் நோக்கத்துடன் போடப்பட்ட திட்டமாகும். இதற் காகத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, ஒலிபரப்புத் தூண்களுக்காக (Transmission towers) ஆணை களும் அணியமாகிவிட்டன. இந்தத் திட்டத்தின் மூலம் தொலைக்காட்சி பார்க்கும் மக்கள் தொகை 25 விழுக்காட்டிலிருந்து 75 விழுக்காடாக உயரும் இது இந்திராவின் திட்டமே என்று பாராட்டுகிறார் பகத்.

[அடிப்படை : இந்தியா டுடே]

ஆக, வானொலியும் தொலைக்காட்சியும் இந்திரா வின் குடும்பச் சொத்தாக ஆகிக்கொண்டு வருகின் றன. நெருக்கடி நிலையின் போது தன் இடக் கையில் காவல்துறை, படைத்துறைகளையும், வலக் கையில் ஒலிபரப்புத் துறையையும் வைத்துக் கொண்டு ஒரு பக்கம் படையை ஏவிவிட்டு மறு பக்கம் புன்னகையோடு எப்படிக் காட்சியளித் தாரோ அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை மறுபடியும் உருவாக்கி வருகிறார் இந்திரா. ஏற்கனவே தென் னிந்தியா தன் கைவிட்டு போயிருக்கிறது. மேலும் மிஞ்சியுள்ள பேராயக்கட்சி ஆட்சிபுரியும் மாநிலங் களில் குழுப் பூசல்கள் சகன்னாத் மிசரா, அந்துலே போன்ற பேராயத் தலைவர்களின் மாபெரும் ஊழல் கள் கண்டுபிடிக்கப்பட்டு இதனால் மக்கள் பேராயக் கட்சியின் மீது நம்பிக்கையை இழந்து கொண்டிருக் கிறார்கள். பஞ்சாபில் சீக்கியர்களின் சிக்கல் நீண்டு கொண்டே போகிறது. தென்னாட்டு முதலமைச்சர் களின் போக்கு இந்திராவுக்குத் தலைவலியைக் கொடுத்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் தன் நிலையைத் தக்க வைத்துக் கொள்ளவும், தன் மகனை வழிமுறை (வாரிசாக) ஆக்கவும், வானொலியையும், தொலைக்காட்சியையும் தம் குடும்பச் சொத்தாக நினைத்து அதை வரம்புமீறிப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். இந்திராவின் இந்த அனைத் ததிகாரப் போக்கைக் கண்டித்து எல்லா எதிர்க்கட்சி களும் குடியரசு இயக்கங்களும் வலிவான கண்டனக் குரல் எழுப்ப வேண்டும்.

— மகிமைப்பிரகாசம் பம்பாய்-1

— நன்றி- 'மனஓசை'

### உறுப்பினர்கள், முகவர்கள் கவனத்திற்கு!

தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்கள் தொடர்பாக, அலுவலகத்திற்கு விடுக்கும் மடல் களில் தங்களின் உறுப்பாண்மை எண் (விடுக்கப்படும் இதழின் முகவரிக்கு மேல் குறிக்கப்பெற்றிருக்கும்) முகவாண்மை எண் (விடுக்கப்படும் இதழ் கட்டின் முகப்பில் குறிக்கப்பெற்றிருக்கும்) ஆகியவற்றைத் தவறாது குறித்தனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்.

### உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/MS(C)/657

அனுப்புதல்: பெறுநர். நூல்-அஞ்சல்

தமிழ் நிலம்

5. அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5

திரு/திருவாட்டி

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.